# முடிவு பாடல்:

ஆண்டவரே நீர் எவ்வளவோ பெரியவர்
அழகான மகத்துவம் உள்ளவர் மகிமை உள்ளவர்

1. ஆண்டவரே உம் பெருமையும் மகிமையும் என்னே ! ஆஆ-2
போர்வைக்காகவே ஒளியைக் கொண்டுள்ளீர் -2
ஆண்டவரே...
கூடாரமாக வான விரிவையும்
இரதங்களென நல்ல மேகங்களைக் கொண்டுள்ளீர்

2. காற்றுகள் உமக்குக் கீழ்ப்படிகின்றன
நெருப்பு உமது நல் ஊழியன் தானே (2)
நீர்தான் புவியின் முகத்தை உருவாக்கினீர் -2
ஆழ்கடலை அதனிடத்தில் தான் வைத்தீரே -2
ஆண்டவரே...

3. மலைகள் அங்கே பள்ளத்தாக்குகள் இங்கே - 2
நீருற்றுகள் வழிந்தோட -2 வயல்வெளியில்
மிருகங்கள் அங்கே-2
பருக வருகின்றன (அங்கே) -2
ஆண்டவரே உம்...

# தேர்ந்து தெளிதல்

## செவிமடுத்தலில் இருந்து செயல்

### பெரிய குழுவிற்கு திரும்புதல்

ஒவ்வொரு சிறிய குழுவும் தாங்கள் “நாம்” என்ற கண்ணோட்டத்தைப் பகிர்ந்துகொள்ளவும், தூய ஆவியார் எதற்கு அழைத்தார் என்று உணர்வதில் கவனம் செலுத்தவும் அழைத்தல். அதிசவாக, அன்றாட வாழ்க்கையில் ‘எளிய செயலைச் செய்ய’ வேரூன்ற உதவும் ஒரு வார்த்தையை அடையாளம் காணுதல்.

எடுத்துக்காட்டு:

- குடும்பங்களாக, கழிவுகளைக் குறைத்தல், நீரைச் சேமித்தல் அல்லது திட்டமிட்டு மறுசுழற்சி செய்தல்
- அதிச க்களாக, சுற்றுசூழல் ஒருங்கிணைப்புக்குழுவாக ஒரு எளிய சுற்றுச்சூழல் முன்னெடுப்பை ஏற்பாடு செய்தல் (சுத்தம் செய்தல், மரம் நடுதல், விழிப்புணர்வுக் கூட்டத்தை ஏற்பாடு செய்தல்)
- தனிநபர்களாக, ஆடம்பரத்திற்குப் பதிலாக, எளிமை மற்றும் நன்றியுணர்வு நிறைந்த வாழ்க்கை முறையைக் கடைப்பிடித்தல்

## பரிந்துரை இறைவேண்டல்

வழிநடத்துனர் பங்கேற்பாளர்களை சுருக்கமான இறைவேண்டலைச் செய்ய அழைத்தல்.

எடுத்துக்காட்டு:

.......“ஆண்டவரே, உமது படைப்பை மதித்துப் பாதுக்காக எங்களுக்கு உதவியருள உம்மை மன்றாடுகிறோம்.
...... “ஆண்டவரே, பூமிக்குத் தீங்கு விளைவிக்கும் எங்கள் பழக்கவழக்கங்களை மாற்றிக்கொள்ள எங்களுக்கு உதவியருள உம்மை மன்றாடுகிறோம்.
பதிலுரை: ஆண்டவரே எங்கள் மன்றாட்டை கேட்டருளும்.

## நிறைவு இறைவேண்டல்:

ஆண்டவர் கற்றுத் தந்த இறைவேண்டல்

- தமதிரித்துவ புகழ் (தந்தைக்கும் மகனுக்கும் ...)
- அமைதியைப் பகிர்ந்துகொள்வோம்.

**Published by:** Peninsular Malaysia Pastoral Team **Email:** api@archkl.org INTERNAL CIRCULATION ONLY

ஜூலை 2026

# அதிசசிந்தனை

**ஒன்றித்தப் பயணம் மற்றும் இறைவாக்கு உரைக்கும் திருஅவையை நோக்கி ஒன்றித்து நடத்தல்**

*மறைத்தூதுரைக்கும் சீடத்துவத்திற்கான மக்கள்*

மாதாந்திர நோக்கம்:

## சூழலியல் - நமது பொதுவான இல்லத்தைப் பராமரித்தல்

நம்பிக்கையில் ஒன்றாகப் பயணிக்கும் இறைமக்களாகிய நாம், காலத்தின் அறிகுறிகளைக் கேட்டுப் பகுத்தறிந்து, அவற்றுக்குப் பதிலளித்து, நற்செய்தியைப் பறைசாற்றி, ஒன்றித்துப் பயணிக்கும் திருஅவையாக மாற அழைக்கப்பட்டுள்ளோம். நமது கிறிஸ்துவ அழைப்பானது, நற்செய்தியைப் பறைசாற்றுவது மட்டுமல்ல; கடவுளால் நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட வாழ்வின் மாண்பையும் படைப்பின் அழகையும், பாதுகாப்பது நம்முடைய அழைப்பாகும். திருஅவையானது சூழலியல் சார்ந்த மனமாற்றத்திற்கும், நமது பொதுவான இல்லத்தைப் பேணுவதில் புதுப்பிக்கப்பட்ட பொறுப்புணர்ச்சிக்கும், அனைத்து மக்களையும் அழைக்கிறது. நமது இந்தப் பகிரப்பட்டப் பயணம், படைப்பின் உண்மையுள்ள பாதுகாவலர்களாகவும், உலகிற்கான எதிர்நோக்கின் துணிவுள்ள சாட்சிகளாகவும் நம்மை வழிநடத்துவதாக.



# எதிர்கொள்வது

## தொடக்கப்பாடல்

போற்றுங்கள் ஆண்டவரை வாழ்த்துங்கள் அவர் பெயரை
பாடுங்கள் அவர் புகழை மகிழுங்கள் நினைத்து அவர் செயலை
அன்பும் அருளும் உள்ளவர் ஆண்டவர் – 2

1. உயர்ந்த இரக்கம் உள்ளவரை வாழ்த்துங்கள் – 2
அளவற்ற மேன்மை மிகுந்தவரை வாழ்த்துங்கள் – 2
சொற்களைக் கடந்த வல்லவரை வாழ்த்துங்கள் – 2
மக்கள் புகழுக்கு உரியவரை வாழ்த்துங்கள் – 2

2. வியத்தகு செயல் பல செய்தவரை வாழ்த்துங்கள் – 2
அச்சம் மிகுந்த செயலோனை வாழ்த்துங்கள் – 2
சினம் கொள்ளத் தாமதம் செய்பவரை வாழ்த்துங்கள் – 2
நன்மையைப் பொழியும் ஊற்றவரை வாழ்த்துங்கள்

## தொடக்க இறைவேண்டல்

படைப்பாளரான எங்கள் அன்பு இறைவா, நீர் பூமியை எங்கள் பொறுப்பில் ஒப்படைத்திருக்கிறீர், மேலும் நீர் படைத்த அனைத்துடனும் இணக்கமாக வாழ எங்களை அழைத்திருக்கிறீர். படைப்பை உமது கொடையாகக் காண எங்கள் கண்களையும், உரிமை கோருவதற்குப் பதிலாகப் பொறுப்புணர்வை உணர எங்கள் இதயங்களையும், சுரண்டுவதற்குப் பதிலாகப் பாதுகாக்க எங்கள் கைகளையும் திறந்தருளும். ஒரே சமூகமாக ஒன்றிணைந்து நடக்க எங்களுக்குக் கற்றுக்கொடும், பூமி மற்றும் ஏழைகளின் அழுகுரலையும் கேட்கவும், மேலும் அக்கறையுள்ள உறுதியான செயல்கள் மூலம் எங்கள் நம்பிக்கையை வாழவும் கற்றுக்கொடும். எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்துவின் வழியாக மன்றாடுகிறோம். ஆமென்.

## மேய்ப்புப்பணிப் பாதை

தொடக்கத்தில் , கடவுள் படைப்பை மனிதகுலத்திடம் ஒப்படைத்தார்; —உரிமையாளர்களாக அல்ல, மாறாகப் பாதுகாவலர்களாக ஒப்படைத்தார். “பண்படுத்தவும் பாதுக்காக்கவும் ” என்ற கட்டளை, பொறுப்பு, அக்கறை மற்றும் கட்டுப்பாடு ஆகியவற்றின் உறவை வெளிப்படுத்துகிறது. படைப்பு என்பது பயன்படுத்தப்பட வேண்டிய ஒரு வளம் மட்டுமல்ல, அது பாதுகாக்கப்பட்டுப் பகிரப்பட வேண்டிய ஒரு பரிசு.

இன்று, சூழலியல் நெருக்கடிகள்—காலநிலை மாற்றம், மாசுபாடு, பல்லுயிர் இழப்பு—ஆகியவை சுற்றுச்சூழல் பிரச்சினைகள் மட்டுமல்ல; அவை தார்மீக மற்றும் ஆன்மீக அக்கறைகளும் ஆகும். அவை ஏழைகளை மிகவும் கடுமையாகப் பாதிக்கின்றன, மேலும் நாம் ஒன்றாக வாழும் முறைக்குச் சவாலாக அமைகின்றன. நாம் படைப்பை நடத்தும் விதம், கடவுளுடனும், ஒருவருக்கொருவருடனும், எதிர்கால சந்ததியினருடனும் நாம் எவ்வாறு உறவாடுகிறோம் என்பதைப் பிரதிபலிக்கிறது.

ஒரு ஒன்றித்துப்பயணிக்கும் திருஅவை, பூமியின் அழுகுரலையும் ஏழைகளின் அழுகுரலையும் கேட்டு, ஒன்றாகப் பயணிக்கிறது. ஒரு இறைவாக்குரைக்கும் திருஅவை, திருஅவை பழக்கவழக்கங்களை மாற்றவும், நுகர்வோர் கலாச்சாரத்திற்குச் சவால் விடவும், நிலையான வாழ்க்கை முறைகளைத் தேர்ந்தெடுக்கவும் துணிகிறது. நமது பொதுவான இல்லத்தைப் பேணுவது ஒரு விருப்பத் தேர்வு அல்ல—அது நமது நம்பிக்கையின் செயல் வடிவமாகும்.


இந்த மாதம், நமது அதிச க்களும், குடும்பங்களும், நன்றியுணர்வு, எளிமை மற்றும் பொறுப்புணர்வு ஆகியவை அன்றாட வாழ்க்கையை வடிவமைக்கும் ஒரு படைப்பை மையமாகக் கொண்ட ஆன்மீகத்தை எவ்வாறு வாழலாம் என்பதைப் பற்றி நாம் சிந்திக்கிறோம்.

# இறைவார்த்தை

## இறைவார்த்தை: தொடக்கநூல்: 2:15

ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தவும் பாதுகாக்கவும் ஆண்டவராகிய கடவுள் மனிதனை அங்கு கொண்டுவந்து குடியிருக்கச் செய்தார்.

மேற்குறிப்பிட்ட இறைவார்த்தையை தியானித்து, இறைவன் என்னிடம் ஒப்படைத்த தோட்டமாகிய என் வீடு, என் சமூகம், என் சுற்றுச்சூழல் ஆகியவற்றை நான் எவ்வாறு வளர்த்துப் பேணிக்காக்கிறேன் என்பதையும் சிந்தித்துப் பார்க்க ஒரு சில நிமிடங்கள் அமைதியுடன் மன்றாடுங்கள்.



# உரையாடல்

## ஆவியில் கலந்துரையாடல்

4–6 பேர் கொண்ட குழுவில் கீழ்க்கண்ட மூன்று சுற்றுகளில் பகிர்ந்துகொள்ளுங்கள். ஒவ்வொரு பகிர்வுக்குப் பிறகும் ஒரு நிமிடம் அமைதியில் இருப்போம்.

**சுற்று 1** “நான்” என்னும் கண்ணோட்டத்தில் ((அமைதியில் தியானிக்க தயாராயிருங்கள். அனைவரும் பகிர்ந்துகொள்ளலாம், ஆனால் ஒவ்வொருவரும் 2 நிமிடத்திற்கு மேல் பகிரக்கூடாது. மற்றவருடைய பகிர்வையொட்டி எந்தக் கருத்தும் தெரிவிக்க வேண்டாம்)

- தொடக்கநூல் 2:15 இறைவசனத்தின்படி, இன்றைய சுற்றுச்சூழல் சவால்களைக் கருத்தில் கொண்டு நமது பொதுவான இல்லத்தைப் பேணிப்பாதுகாக்க, என்னுடைய எந்தெந்த தனிப்பட்ட பழக்கவழக்கங்கள் அல்லது மனப்பான்மைகளை நான் மாற்றிக்கொள்ளவேண்டும்.

(ஒவ்வொரு நபரின் பகிர்வுக்கும் நன்றி சொல்லியபின், ஒரு நிமிடம் அமைதி காத்தபின் அடுத்த நபர் பகிர்வைத் தொடங்கலாம்)

**சுற்று 2** “நீங்களும் நானும்” என்னும் கண்ணோட்டத்தில் (இப்போது குழுவில் மற்றவர் பகிர்ந்த கருத்துகளுக்குப் பதில் அளிக்க அழைப்பு – ஒவ்வொருவரும் ஒருமுறை மட்டுமே தங்களுடைய கருத்துகளைப் பகிர்ந்துகொள்ளலாம்.)

அனைவரின் கருத்துகளையும் செவிமடுத்தபின்:

- மற்றவர்கள் பகிர்ந்துகொண்டவற்றில் என் கவனத்தை ஈர்த்தது எது?
- பொதுவான போராட்டங்கள் அல்லது பகிர்ந்துகொள்ளப்பட்ட நம்பிக்கைகளை நான் எங்கே காண்கிறேன்?

(ஒன்று அல்லது இரண்டு குறிப்புகளைத் தெரிவிக்கவும்)

**சுற்று 3** – ‘நாம்’ என்னும் கண்ணோட்டத்தில் (இப்போது வழிநடத்துனர் அல்லது பொறுப்பாளர் அனைவரும் பகிர்ந்துகொண்டவற்றில் இருந்து பொதுவான கருத்தைத் தேர்ந்தெடுக்குமாறு அனைவரையும் அழைப்பார்)

- ஒரு அதிச வாக படைப்பைப் பேணிக்காப்பதில் நாம் எவ்வாறு ஒன்றிணைந்து செயல்படலாம் என்பது குறித்து தூய ஆவியார் நமக்கு என்ன கூறுகிறார்?

(ஒவ்வொரு நபரின் பகிர்வுக்கும் நன்றி சொல்லியபின், ஒரு நிமிடம் அமைதி காத்தபின் அடுத்த நபர் பகிர்வைத் தொடங்கலாம்)